செ.வெ.எண.08 நாள் : 04.04.2020

# பத்திரிக்கைச் செய்தி

கொரணா வைரஸ் நோய் தாக்குதலில் இருந்து அனைவரையும் பாதுகாப்பதற்காக தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவது அனைவரும் அறிந்ததே. விவசாயிகளின் நலன் கருதி, விவசாய பொருட்கள் கொள்முதல், விதை மற்றும் உர விற்பனை நிலையங்கள், விவசாய இயந்திரங்கள் மற்றும் வாடகை மையங்கள் போன்ற நடவடிக்கைகளுக்கு நடப்பு ஊரடங்கு உத்தரவு காலத்தில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து, தமிழ்நாடு அரசு மற்றும் டா∴பே நிறுவனத்தின் ஜெ பார்ம் ஆகியவை இணைந்து மாஸே பர்குசன் மற்றும் எய்சர் டிராக்டர்கள் மற்றும் வேளாண் இயந்திரங்களை சிறு மற்றும் குறு விவசாயிகள் அனைத்து விதமான விவசாய பணிகளை மேற்கொள்வதற்காக 90 நாட்களுக்கு விவசாயிகளுக்கு வாடகையின்றி உபயோகபடுத்திக்கொள்ள வழங்கப்பட உள்ளது. இது தொடர்பாக, டிராக்டர் உள்ளிட்ட பண்ணை இயந்திரங்கள் தேவைப்படும் சிறு மற்றும் குறு விவசாயிகள் கீழ்க்காணும் முறையில் பதிவு செய்து கொள்ளலாம்.

உழவன் செயலியில் உள்ள வேளாண் இயந்திர வாடகை சேவையின் மூலம் இயந்திர வாடகை மற்றும் விடுதல் சேவையை பயன்படுத்தி தங்களுக்கு தேவையான வேளாண் இயந்திரம், தேதி மற்றும் நேரத்தை பதிவிட்டு முன்பதிவு செய்து கொள்ளலாம்.

டா∴பே நிறுவனத்தின் ஜெ பார்ம் சேவை மையத்தின் 18004200100 என்ற இலவச தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டும் தங்களுக்கு தேவையான வேளாண் இயந்திரம், தேதி மற்றும் நேரத்தை குறிப்பிட்டு முன்பதிவு செய்யலாம்.

டா∴பே நிறுவனத்தின் ஜெ பார்ம் கள அலுவலர்களை தொடர்பு கொண்டும் தங்களுக்கு தேவையான வேளாண் இயந்திரம், தேதி மற்றும் நேரத்தை குறிப்பிட்டு முன்பதிவு செய்யலாம்.

எனவே, சிறு மற்றும் குறு விவசாயிகள் அனைவரும் மேற்கண்ட ஏதேனும் ஒரு முறையில் தங்களுக்கு தேவையான டிராக்டர் உள்ளிட்ட பண்ணை இயந்திரங்களை பதிவு செய்து வாடகை கட்டணம் இல்லாமல் விவசாய பணிகளை மேற்கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**